# 2
# நன்மையின் உறைவிடம்



மரக்கிளைகளில் தாவி கொண்டிருந்த அணில் கீழே தூங்கிக்கொண்டிருந்த ஓநாயின் மேல் தவறி விழுந்தது. கண் விழித்த ஓநாய் அந்த அணிலைப் பிடித்துக்கொண்டது.

தன் உயிர் போகப் போகிறது என்று அஞ்சிய அணில் “என்னை விட்டு விடு” எனக் கெஞ்சியது. “நான் கேட்கும் கேள்விக்கு நீ சரியான பதில் தந் தால் உன்னை விட்டுவிடுகிறேன்” என்றது ஓநாய்.



“கேளுங்கள்! எனக்குத் தெரிந்தால் பதில் சொல்கி றேன்” என்றது அணில்.

உடனே ஓநாய், “அணில்களாகிய நீங்கள் எல் லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். மரக்கிளைகளில் ஓடியாடி விளையாடுகிறீர்கள். உங்களை விடப் பல மடங்கு வ மை உள்ளவர்கள் நாங்கள். ஆனால் நாங்கள், எப்போதும் சோகத்துடன் இருக்கி றோம். அது ஏன்?” என்று கேட்டது.

“என்னை இந்த மரத்தின் மேல் ஏற அனுமதித்தால் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன்” என்றது அணில்.

“அப்படியே செய்” என்று அணிலை விட்டு விட்டது ஓநாய்.

மரத்தின் கிளையில் பாதுகாப்பாக அமர்ந்த அணில் “ஓநாய் களாகிய நீங்கள் கொடியவர்கள், நீங்கள் செய்யும் கொடுமை களுக்கு அளவே இல்லை, அந்தக் கொடுமைகள் உங்கள் உள் ளத்தை எப்பொழுதும் அரித்துக்கொண்டே இருக்கின்றன. அதனால்தான் நீங்கள் எப்பொழுதும் சோகமாக இருக்கிறீர்கள். அணில்களாகிய நாங்கள் எப்போதும் எந்த உயிருக்கும் தீங்கு செய்வதே இல்லை. அதனால் நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சி யாக இருக்கிறோம் என்று சொன்னது.

- கதையை வாசித்து ஓநாயின் பண்பிற்கும் அணி ன் பண்பிற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுங்கள்?
- சமூகத்தில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும்? கூறுங்கள்.

# நல்லொழுக்கம்

பள்ளியிலே படிக்கிறீர், துள்ளி விளையாடுகிறீர்!
எள்ளிநகை யாடாதீர்கள்! எளியோரைத் தாக்காதீர்கள்!
கற்றுக்கொள்ள பேராசை கொள்ள வேண்டும்! – நீங்கள்
கற்றதெல்லாம் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்

மரத்திற்குச் சொந்தமில்லை அதில்விளையும் கனிகள் – அந்த
மரபு நமக்குத் தேவையில்லை தாய்தந்தையே தெய்வங்கள்!
அறிவுக்கு அழகு தருவது அன்பு – அது
ஆனவரை துன்பம் போக்கும் நம்பு!

குத்தலாகப் பேசி பிறர் மனதைக் குத்தாதீர்!
குடும்பத்தின் தலைவன் தந்தை மறந்துவிடாதீர்!
எத்தனைதான் வரினும் எதிர்த்துப் பேசாதீர்!
எந்நாளும் கோபத்தோடு உறவு கொள்ளாதீர்!

தொண்டு செய்வதற்கு என்றும் சளைக்கக் கூடாது – வெளித்
தோற்றத்தைக் கண்டு ஏமாறக் கூடாது!
அடுத்தவரைப் பற்றிக் கோள் சொல்லக் கூடாது!
அழைப்பில்லாமல் எந்த இடமும் போகக் கூடாது!

காக்கையைப் போல் பகிர்ந்து உண்ணவேண்டும் – வீட்டைக்
காக்கும் நாய்போல் நன்றி மறவாமை வேண்டும்!
பசுவைப்போல் தன் பால் கொடுத்துப் பிறர்க்குதவ வேண்டும்!
பைங்கிளி போல் இனிய மொழிகள் பேசி மகிழ வேண்டும்!

உயிர்களிடத்தில் அன்புகாட்ட புத்தன் ஆக வேண்டும் – நீங்கள்
உண்ணும் உணவு அளவான சத்துணவாக வேண்டும்!
மரங்களை உங்கள் நண்பர்களாய் மதித்துக்காக்க வேண்டும் – ஒரு
மரமாவது உன் உழைப்பால் உருவாக்க வேண்டும்!

**–கவிஞர் ஓ.ஆ. சனார்த்தனம்**

## செயல்பாடுகள்

- பாடலை இசையுடன் பாடுங்கள்.
- கவிஞர் கூறும் வாழ்க்கை வழிமுறைகள் போன்று உங்கள் மனதில் தோன்றும் நல்ல வழிமுறைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.
- "நல்ல சமூகப் பண்புகளைக் கடைபிடிப்பேன்" என்ற தலைப்பில் ஓர் உறுதி மொழிக் குறிப்பினை இக்கவிதையி ருந்து தயாரியுங்கள்; பள்ளி அறிவிப்புப்பலகையில் ஒட்டுங்கள்.
- கவிதையை நிறைவு செய்க:

  உயிர்களிடம் அன்பு காட்டுங்கள்!
  உள்ளத்தில் நன்மை நினையுங்கள்!
  தீமை என்பதை ஒதுக்குங்கள்! – பிறர்
  துயர் துடைக்கத் துணிந்து நில்லுங்கள்!

  ..........................................................................................

  ..........................................................................................

  ..........................................................................................

  ..........................................................................................

  ..........................................................................................

  ..........................................................................................

  ..........................................................................................

- பாடல் பகுதியில் வருவது போன்ற நன்னெறிக் கவிதைகளைத் திரட்டுங்கள்; வகுப்பில் பாடுங்கள்.

# இரயி ல் ஒருவன்

'பாம்' என்ற ஒ யுடன் இரயில் வேப்பூர் நிலையத்தில் வந்து நின்றது. வேகமாக மக்கள் ஓடி வந்து ஏறினார்கள். ரயி ல் தின்பண்டங்களை விற்பனை செய்யும் வியாபாரிகளும் விரைந்து வந்து ஏறிக்கொண்டனர்.

இரயில் பெட்டிக்குள் கூச்சலும் கும்மாளமுமாக இருந்தது. அவ்வேளையில் வாழைப்பழத்தின் தோல் வழுக்கி விழப்போன குழந்தையை ஒருவர் காப்பாற்றியதால் குழந்தையின் மண்டை அடிபடாமல் தப்பியது.

இந்நிகழ்ச்சிகள் எதையும் கண்டுகொள்ளாமல் வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தேய்த்துக்கொண்டு மீதியைப் பெட்டியின் சன்னல் பலகையில் தேய்த்துக் கொண்டிருந்தார் ஒருவர்.

இதற்கிடையில் கயிற்றால் கட்டி, கழுத்தில் மாட்டப்பட்ட மூங்கில் கூடையுடன் தங்களிடம் வந்த சிறுவனை எல்லோரும் உற்றுப்பார்த்தனர். கூடைக்குள் இருக்கும் தின்பண்டத்தை வாங்கிச் சாப்பிட வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் முகத்தில் பிரதிப த்தது.

அவனது வாயி ருந்து எந்த விற்பனைக் குரலும் எழும்பவில்லை. கூடையைப் பார்த்து ஏமாந்தவர்கள் "இதென்ன வியாபாரம்! வெறுங்கூடையோட? சரியான பைத்தியம்...! வியாபாரமில்லை இது ஒருவகையான பிச்சை" என்று அவனை விமர்சித்தனர்.



அவன் அவ்விமர்சனங்களுக்குக் கவலைப்பட்டவனாகவே தெரியவில்லை. கருமமே கண்ணாகக் கீழே கிடந்த சாத்துக்குடித் தோல்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கூடையில் போட்டான். இருக்கைக்குக் கீழே கிடந்த வாழைப் பழத் தோல்களை அகற்ற அவன் குனிந்து பொறுமையாகப் பணி செய்தான். பின் கடலைத் தோல்களைத் தன்னிடமிருந்த பிரஷால் ஒன்று சேர்த்து அவற்றையும் கூடையில் போட்டான். ஆங்காங்கு கிடந்த தாள்களையும் எடுத்துக் கூடைக்குள் போட்டான்.

இப்போது அந்தப் பெட்டி சுத்தமாகி இருந்தது என்ற திருப்தியுடன் அவனது பார்வை பெட்டியின் அங்குமிங்கும் சென்றது. சன்னல் பலகையி ருந்த சுண்ணாம்புக் கறையைத் தான் வைத்திருந்த ஈரத்துணியால் துடைத்தான். வெற்றிலை மென்றவர்கள் அக்காட்சியை வியப்போடு பார்த்தார்கள். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர் போல் தோரணையுடைய ஒருவர் "அரசாங்கமே இப்படியொரு ஆளைப் போட்டிருப்பாங்க" எனக் கிண்டலடித்தார். அதையும் விஞ்சும் முறையில் "இந்த ஆரஞ்சுப்பழத் தோலெல்லாம் எடுத்திட்டுப் போய் வேறு ஏதாவது பிசினஸ் பண்ணுவாங்க; சோழியன் குடுமி சும்மா ஆடுமா?" என்றெல்லாம் பலவாறு விமர்சித்தவாறே இருந்தனர். ஒரு பெண்மணி மெதுவான குர ல் தன் கணவரிடம் "காலம் கெட்டு கிடக்குதுங்க, நம்ம பொருட்களையெல்லாம் பத்திரமாக வச்சுக்கணும், கவனமாக இருங்க!" என்றாள்.

வேலையற்ற வீணர்களின் மூளையற்ற பேச்சைச் சற்றும் பொருட்படுத்தாமல் ஒரு கர்மயோகியாக அடுத்த பெட்டிக்குப் போக முனைந்தபோது, ஓர் அன்புக் குரல் அவனை அழைத்தது. அது ஒரு பெண்மணியின் குரல்.

"சிறிது நேரம் இப்படி உட்காரப்பா...." என்றாள் அந்தப் பெண்மணி. அவன் தன்னுடைய மூங்கில் கூடையைக் கழற்றிக் கீழே வைத்தபடி அவளருகே சென்றான். "உட்காரப்பா...! ஏன் தயக்கம்?" சின்னஞ்சிறு அரும்பு எப்படி அருமையாகச் சுத்தம் செய்து விட்டது என உள்ளத்தில் நினைத்தவளாகப் பரிவுடன் "உன் பேரென்னப்பா?" எனக் கேட்டாள்.

"பாபு"

"உனக்கு ஏம்பா இந்த வேலை?"

"படிச்சவங்க பல பேரு அவங்க வீட்டைச் சுத்தமாக வைக்கிறாங்க. ஆனா பொது இடங்களையும் பொதுச்சொத்துக்களையும் இப்படி அசுத்தம் செய்யறாங்க. இந்த ரயில் சென்னை சென்றடைய இன்னும் பத்து மணிநேரம் ஆகும். ரயி ல் ஏறின உடனேயே அதை அசுத்தமாகவும் அசிங்கமாகவும் ஆக்கற வேலையில் பலபேர் இறங்கிடறாங்க, இதனாலே மத்தவங்களுக்கு எவ்வளவு தொல்லை...! இது நல்லதா அம்மா?" பாபுவினுடைய கண்களில் கண்ணீர் கசிந்தது.

"எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.... இந்த நாட்டின் பெருமைக்குத் தகுந்தநனாக விளங்கிட என்றும் பாடுபடுவேன்... அவர்களது நலத்திலும் வளத்திலும் தான் என்றும் மகிழ்ச்சி காண்பேன். என்று பள்ளிக்கூடத்தில்

உறுதிமொழி எடுக்கிறோம். இதில் இருக்கிற ஒவ்வொரு செய்தியையும் நான் உணர்வுபூர்வமாகப் பார்த்து அதை உண்மையிலேயே செயல்படுத்த நினைக்கி றேம்மா... இதுக்கு என்னோட ஆசிரியர்களும், பெற்றோர்களும் ரொம்ப உதவி பண்றாங்கம்மா...” என்றான்.

மேலும் அவனுக்கு மிகவும் உணர்வூட்டிய மற்றொரு நிகழ்ச்சியையும் சொன்னான்.

அது ஜப்பானில் நடந்த நிகழ்ச்சி, ஒரு பள்ளிக்கூட மாணவன் ரயி ல் பய ணம் செய்து கொண்டிருந்தபோது அவனுக்கு எதிர் இருக்கையில் ஒரு பெரி யவர் வந்தமர்ந்தார், எதிரே இருந்த பலகையில் கால்களை நீட்டிக்கொண்ட அவர் சற்று நேரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். பெரியவரது ‘ஷு’ சாய்மானப் பலகையில் அசைந்து பலகையில் கீறல் ஏற்படுவதைக் கண்டான் அந்த மாண வன். இந்த ரயில் என் நாட்டுச் சொத்து. இதற்கு எந்தத் தீங்கும் வரக்கூடாது என்ற தீர்மானத்தோடு பெரியவரது உறக்கத்திற்கும் இடையூறு ஏற்படாமல் அவரது காலைத் தனது மடியில் தூக்கி வைத்துக்கொண்டான். இந்த நிகழ்ச்சி யைத் தமிழாசிரியர் சொல்லச் சொல்ல அது பாபுவின் உள்ளத்தில் புதிய தீர்மா னங்களை எடுக்கத் தூண்டியது. அவன் ஜப்பானிய மாணவனைப்போல் பற்றுள் ளவனாக வாழத் தொடங்கினான்.

“எல்லோரும் வீடு வீடு என்று சுயநலத்தோடு இருந்தா யாருதாம்மா நாட் டைப் பற்றிக் கவலைப்படறது? இது என்னோட நாடு, இது எனது நாட்டில் ஓடற ரயில், இது என்னுடைய சொத்து, இதை அழகாகவும் சுத்தமாகவும் வைக்க வேண் டியது என்னோட கடமை...” என்றான் பாபு.

”நீ செய்யறது நல்ல வேலைதான்...! இதனால் உன் படிப்புக்கு ஏதாவது பிரச் சனை உண்டா?

”இல்லேம்மா...! பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வந்து பெற்றோருக்கு உதவியா வேலை செய்வேன்... அப்புறம் கொஞ்ச நேரம் விளையாட்டு... அதுக் கப்புறம் ரயில்ல ஏறி ரெண்டு மணி நேரம் இந்த வேலை...”

உன்னை டிக்கட் இல்லாதவன் என்று பிடிச்சா? என்று அன்போடு வினவி னாள்,

“அப்படி என்னை யாரும் பிடிக்க முடியாதும்மா. ஒரு நல்ல மனிதர் எனக்கு சீசன் டிக்கட் எடுத்துக் கொடுத்திருக்கிறார்.” என்று பாபு சொன்னதைக் கேட்ட பின்தான் அப்பெண்மணியின் மனதில் நிம்மதி ஏற்பட்டது.

”நீ சுத்தம் செய்து போனபின் மீண்டும் குப்பையைப் போட்டா?”

”அம்மா... நான் என்னுடைய செயலால் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்க நினைக்கிறேன்.... நானே முழு நேரக் காவலனாகக் காக்க முடியாதம்மா.!. தூய்மை உணர்வு எல்லோரிடமும் வரணும்மா...!” தெளிவாகப் பதில் சொன்னான் பாபு.

”பாபு! நீ நல்லா இருக்கணும்... இந்தா இதை வச்சுக்க!

ஒரு பத்து ரூபாய் தாளை அவனிடம் நீட்டினாள்,



”வேண்டாம். உங்களது அன்பே போதும்” என்று அன்போடு மறுத்து விட்டான். அவள் அன்போடு நீட்டிய ஆரஞ்சுப்பழத்தைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தான்.

“ஊரிலே இருக்கிற சிலைகளுக்கு மாலை போடறதை விட உன் மாதிரி பிள்ளைக்குத் தாம்பா மாலை போட வேண்டும்....”

வாயார வாழ்த்தினாள்.

அவன் அவளைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

‘பாம்...’ என்று ஒ எழுப்பிக் கொண்டு இரயில் அடுத்த நிலையத்தை நெருங்கியது. பாபு தன் தூய்மைப் பணியைத் தொடர ஆயத்தமானான்!.

## செயல்பாடுகள்

- பாபுவை நாட்டுப்பற்று உடையவனாகத் தூண்டிய நிகழ்ச்சியைக் கூறுங்கள்.
- பாபுவின் சமூகச் சேவையைப் பாராட்டி ஒரு கடிதம் தயாரியுங்கள்.
- நாம் வாழும் சமுகத்திற்குப் பாபுவைப்போல் நம்மால் என்னென்ன தொண்டுகளைச் செய்ய முடியும் என எழுதுங்கள்.

# நான் பெற்ற செல்வம்

அவசரமாக எனக்குச் சென்னை செல்லவேண்டும். இரயிலுக்காகக் காத்திருந்தேன். அப்போது அந்த அறிவிப்பு கேட்டது. “பயணிகளின் கவனத்திற்கு...! மங்களூரி  ருந்து பாலக்காடு வழியாகச் சென்னை செல்லும் ‘வெஸ்ட் கோஸ்ட்’ ரயில் அறுபது நிமிடம் தாமதமாக ஓடிக்கொண்டிருக்கிறது.” இன்னும் ஒரு மணிநேரம்! தலையில் அடித்துக்கொண்டேன். எப்படி நேரத்தைப் போக்குவது? அதுவும் தனிமையில்! பக்கத்தி  ருந்த புத்தகக் கடையி  ருந்து ஒரு வாரஇதழ் வாங்கினேன்; படிக்கத் தொடங்கினேன். புத்தகத்தில் சான்றோர் கூற்றாக ஒரு செய்தி கொடுக்கப்பட்டிருந்தது. “மனிதன் தனிமையாகப் பிறக்கின்றான். ஆனால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு சங்கி  த் தொடர்போல் அவன் பிறரோடு இணைக்கப்பட்டுள்ளான்” எவ்வளவு உண்மை! தொடர்ந்து அச்செய்தியின் விளக்கத்தைப் படித்தேன்.



“எவ்வளவுதான் பணமும் புகழும் இருந்தாலும், பிறரது உதவியோ ஒத்துழைப்போ இல்லாமல் எவருக்கும் தனிமையில் வாழ இயலாதுதான்! சமூக வாழ்க்கையின் பயனாகத்தான் மனிதன் மனிதனாக வாழ்கின்றான். மனிதனை ஒரு ‘சமூக விலங்கு’ என்று சொல்வதற்கும் இதுதானே காரணம்! ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஒவ்வொருவரும் ஒரு முத்தைப் போன்றவர்கள். அந்த முத்துக்களை அன்பு என்னும் நூ  ல் சீராகக் கோர்க்கும்போது அழகான மாலை என்னும் குடும்பம் உருவாகின்றது. பல குடும்பங்கள் சேர்ந்தது தானே ஒரு சமூகம்! மாலையின் நூல் அறுந்து

விட்டாலோ? அத்தனை முத்துக்களும் கீழே உதிர்ந்துவிடும். அது போன்றதுதான் குடும்பமும் சமூகமும்! அன்பும் பரஸ்பர உறவும் அறுந்துவிட்டால் சமூகம் சீரழிந்துபோகும். எந்த ஒரு மனிதனையும் சமூகத்தி ருந்து பிரிக்க இயலாது. ஏனெனில் ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் ஓர் அங்கமாக இருக்கின்றான். சமூகம் நிலைபெற்றால் குடும்பங்கள் நிலைபெறும்; குடும்பங்கள் நிலைபெற்றால் தனிமனிதன் நிலை பெறுவான். எனவே தனி மனிதனின் நிலைபேற்றிற்குச் சமூகம் சீராகவும் செழிப்பாகவும் நிலைபெறவேண்டிய கட்டாயம் உள்ளது. தனியொருவன் தனக்கும் மேலாக இந்தச் சமூகத்தை நேசிக்கவேண்டும் என்று சொல்வதன் நோக்கம் அதுதானே!" அதைப் படித்துக்கொண்டிருக்கும்போதே சிறகுமுளைத்த என் சிந்தனைகள் எங்கெங்கோ பறக்கத் தொடங்கின.

ஓர் ஏழைக்குடும்பம்; வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற குடும்பம். சேர்ந்தே இருப்பது புலமையும் வறுமையும் என்பார்களே! அந்தக் குடும்பத் தலைவரும் அப்படித்தான்! அவரது பெயர் பெருஞ்சித்திரனார். அவருக்கு இருந்த ஒரே சொத்து அவரது புலமை மட்டும்தான்! கம்பையே காலாகக்கொண்டு தள்ளாடித்தள்ளாடி நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருந்தாள் அவரது தாய். குப்பைக்கீரையைப் பறித்துவந்து உப்பின்றி வேகவைத்துப் பசியைப் போக்கப் பாடுப்பட்டாள் அவரது மனைவி. பாலுக்கு அழுது ஏங்கிக்கொண்டிருந்தது அவரது குழந்தை. இப்படியொரு சூழ்நிலையில் அந்தப் புலவர் முதிரமலைத் தலைவன் குமணன் என்னும் வள்ளலைப் பார்க்கச் செல்கின்றார். அவனைப் புகழ்ந்து பாடுகின்றார். அவரது பாட ன் சிறப்பை வியந்து, பொன்னும் பொருளும் முத்தும் மணியும் வாரிவாரி வழங்கினான் குமணன். அனைத்தையும் சுமந்துகொண்டு வீடு நோக்கிச் செல்கின்றார் புலவர், பெருஞ்செல்வம் கிடைத்த நிலையில் குடும்பத்தார் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

அந்தநேரம் புலவர் தம் மனைவியைப் பார்த்து,

"அம்மையே! இது முதிரமலைத் தலைவன் குமணன் தந்த பரிசில். இந்தச் செல்வம் முழுவதையும் நாமே பாதுகாத்து வைத்துக் காலமெல்லாம் வாழலாம் என்று எண்ணாதே...! இதை யார் யாருக்கெல்லாம் கொடுக்கலாம் என்று என்னிடம் கேட்காதே! நீ யார் யாரிடம் அன்பு காட்டுகிறாயோ அவர்களுக்கெல்லாம் கொடு! உன்னிடம் யார் யாரேல்லாம் அன்பு காட்டுகிறார்களோ அவர்களுக்குக் கொடு! நம் குடும்பத்தின் பசியை நீக்க யார் யாரெல்லாம் உதவினார்களோ அவர்களுக்கும் உன் சுற்றத்தார்களுக்கும் கொடு! எல்லோரும் மகிழ்ந்து வாழ்வோம்." என்று சொன்னாராம்.

ஒரு நேர உணவுக்குக்கூட வழியில்லாத கொடும் வறுமையிலும், தனக்குக் கிடைத்த செல்வத்தைத் தாம் மட்டுமே அனுபவிக்காமல் எல்லோருக்கும் வாரி வழங்கச் சொல்லும் அவரது மனிதநேயத்தை என்னென்று சொல்வது! இந்தச் சமூகம் வாழ்ந்தால் தான் நாம் வாழமுடியும் என்னும் அவரது உயர்ந்த கொள்கையை எப்படிப் பாராட்டுவது!

இந்நிகழ்ச்சி இன்று நேற்று நடந்ததல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்தது. புறநானூறு என்னும் சங்கப்பாட ல் 163-ஆவது பாட ல் நெஞ்சை நெகிழவைக்கும் இச்செய்தி இடம்பெற்றுள்ளது.

இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி.

என வரும் அப்பாடலை முழுமையாக நினைவுக்குக் கொண்டுவர முயற்சித்தேன், அதற்குள் தூரத்தில் ரயில் சத்தம் கேட்டது. எனது சிந்தனைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு நான் புறப்படத் தயாரானேன்.

**-முனைவர் மா. நயினார்**

## செயல்பாடுகள்

- "மனிதன் ஒரு சமூக விலங்கு" என ஆசிரியர் ஏன் குறிப்பிடுகிறார்? வாசித்துக் கண்டுபிடியுங்கள்.
- புலவர் பெருஞ்சித்திரனாரின் பண்புகளைப் பற்றி உன்னுடைய கருத்துகளை எழுதுக.
- 'வாழை' எனும் சொல்லும், 'பழம்' எனும் சொல்லும் சேர்ந்தால் 'வாழைப்பழம்' என்றாகிறது. சொற்களுக்கு இடையில் 'ப்' என்ற எழுத்து தோன்றுவதுபோல் பின் வரும் சொற்கள் சேர்ந்தால் என்னென்ன எழுத்துகள் தோன்றும்?
    - புட்டு, குழல்
    - காய்கறி, தோட்டம்
    - மழை, காலம்
    - கொய்யா, பழம்